Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 08-04-2026
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயா | வயது | : | 52 |
| கணவர் பெயர் | : | ஸ்ரீதர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பாரதிதாசன் நகர், தஞ்சாவூர் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 to 5 produced. Accused 6 to 13 present**

Ld. D. **Counsel not Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2) இவ்வழக்கில் இறந்துபோன சசிகுமார் எனது மகன் ஆவார். 9.9.2025 ம் தேதி நான் என் வீட்டிற்கு அருகில் வசிக்கும் மீனா இறந்துவிட்டதால் அவர் இறப்பு துக்கத்தில்

கலந்துகொள்வதற்காக காலை 8 மணிக்கே சென்று விட்டேன்.

3) அப்போது நான் துக்க வீட்டில் இருந்தபோது சுமார் காலை 11.20 மணியளவில் எனது தம்பி மகள் காவ்யா என்பவர் வந்து என்னிடம் என் மகன் சசிகுமாரை தஞ்சாவூர், கலைஞர் நகர் 1ம் தெருவில் உள்ள ஆதிமூலம் மனையில் வெட்டிவிட்டதாக வந்து சொன்னார். நானும் காவ்யாவும் உடனே அங்கு சென்று பார்த்தபோது என் மகனின் தலை முழுவதும் சிதைக்கப்பட்டு மூளை வெளியே வந்திருந்தது. சசிக்குமாரின் இ டது கை , இடது மணிக்கட்டு ஆகிய இடங்களில் வெட்டு பட்டு இறந்துகிடந்தார்.

4) நான் கலைஞர் நகர் 1ம் தெருவில் உள்ளவர்களிடம் என் மகனை யார் வெட்டியது என்று கேட்டேன். அப்போது அந்த இடத்தில் இருந்த சூர்யா எங்களிடம் இந்திராநகரை சேர்ந்த சக்தி, பர்மா காலனியை சேர்ந்த ராஜா என்ற சஞ்சய், சக்தியின் தம்பி கோகுல், பிரபாகரன் மற்றும் பல 10 நபர்கள் சேர்ந்து என் மகனை சூழ்ந்து கொண்டு சக்தி பெரிய வாளை வைத்துக்கொண்டும் ராஜா என்ற சஞ்சய் பெரிய அருவாளை வைத்துக்கொண்டு என் மகனின் தலை கையில் வெட்டி கொலை செய்துவிட்டதாக சொன்னார். அப்போது தடுக்க சென்ற சூர்யாவை பிரபா பிடித்துக்கொண்டதாகவும் மற்ற நபர்கள் தெருவாசிகள் யாரும் சம்பவ இடத்திற்கு வரக்கூடாது என்று சுற்றி வளைத்துக்கொண்டதாகவும் கூறினார்.

5) பிறகு எல்லோரும் ஓடிவிட்டதாகவும் பின்பு தெரு வாசிகள் அனைரும் கூடிவிட்டார்கள் என்று சொன்னார். சிறிது நேரத்தில் 108 ஆம்புலன்ஸ் வந்து எனது மகனின் பிரேதத்தை தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமணை சவகிடங்கிற்கு எடுத்து சென்றுவிட்டார்கள்.

6) Free Fire Game விளையாடுவது சம்பந்தமாக முன்விரோதம் இருந்துள்ளது.

7) நானும் காவ்யாவும் தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் சொல்ல சொல்ல காவ்யா எழுதியது. அதில் நான் கையெழுத்து போட்டேன்.அந்த புகார் இதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும்.

8)இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். மீண்டும் என்னை போலிசார் 23.9.2025 ம் தேதி மாலை 3.00 மணியளவில் காவல் ஆய்வாளர் எனது வீட்டிற்கு வந்து விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதும் இல்லை என முடிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.08 16:51:06 +0530